FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March – 2020**

| தரம் :- 13 (2020) | இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 11) 1 | 21) 4 | 31) 5 | 41) 5 |
| 2) 5 | 12) 3 | 22) 5 | 32) 2 | 42) 1 |
| 3) 2 | 13) 5 | 23) 4 | 33) 3 | 43) 2 |
| 4) 3 | 14) 2 | 24) 1 | 34) 4 | 44) 5 |
| 5) 4 | 15) 4 | 25) 2 | 35) 5 | 45) 5 |
| 6) 1 | 16) 1 | 26) 5 | 36) 1 | 46) 3 |
| 7) 4 | 17) 3 | 27) 3 | 37) 2 | 47) 5 |
| 8) 2 | 18) 2 | 28) 3 | 38) 4 | 48) 5 |
| 9) 3 | 19) 4 | 29) 2 | 39) 3 | 49) 3 |
| 10) 5 | 20) 3 | 30) 4 | 40) 5 | 50) 5 |

(50x2=100 புள்ளிகள்)

*01.* *1)* **வேதங்களின் அமைப்பு**

- இந்துசமய மரபில் வேதங்கள் முதன் நூல்களெனப் போற்றப்படுவன.அவை இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது மரபு. வேதம் என்ற சொல் "வித்" என்ற அடியில் இருந்து பிறந்தது. அது அறிவு என்றும் பொருளுடையது. எனவே வேதங்கள் அறிவு நூல் எனக்கொள்ளப்படுகின்றன.
- அவை எழுதாமறை, சுருதி, மறை,அபௌருஷேயம், சுயம்பு ஆகிய பெயர்களில் அழைக்கப்படுவன
- ஆரம்பத்தில் இருக்கு,யசுர்,சாமம்,ஆகிய மூன்று வேதங்களும் திரயீவித்தியா என அழைக்கப்பட்டன. காலப்போக்கில் மாந்தரீகம் சார்ந்த விடயங்களையும் ஏனைய சமூகம் சார்ந்த விடயங்களையும் கூறும் அதர்வ வேதம் நான்காம் வேதமாக இணைந்தது.
- வேதங்கள் நான்கு என்பாதல் சிறப்பாக சதுர்மறை,சதுர்வேதம் எனப்படலாயின. இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது. யசுர் வேதம் 101 சாகைகளைக் கொண்டு சுக்கிலயசுர்வேதம் எனவும், கிருஷ்ணயசுர்வேதம் எனவும் இருபகுதிகளைக் கொண்டது.
- சாமவேதம் 1549 பாடல்களைக் கொண்டது. பாடல்கள் இசையுடன் பாடப்பட்டன. பூர்வ ஆச்சிகம், உத்தர ஆர்ச்சிகம் என இரு பிரிவுகள் உண்டு.
- அதர்வவேதம் இருபது காண்டங்களையும், 731 சூத்தங்களையும் 6000 பாடல்களையும் கொண்டது.
- வேதங்கள் நான்கு பகுதிகளைக் கொண்டவை. சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிஷதம் என்பன.
- சங்கிதை – மந்திரங்களின் தொகுப்பு. சூக்தத்தின் ரிஷி சந்தஸ், வழிபாட்டிற்குரிய தெய்வம் ஆகிய விபரங்கள் உண்டு.
- பிராமணம் - வேள்வி கிரியைகளுக்கான விதிகளைக் கூறும்.
- ஆரணியகம் - வானப்பிரஸ்தர்களுக்கென இது எழுந்ததாகக் கூறுவர். யாகங்கள் உணர்த்தும் உண்மைகள் பற்றிக்கூறும்.
- உபநிஷதம் - மெய்ப்பொருள், பிரமம், ஆன்மா, உலகம் பற்றிய தத்துவப் பகுதிகளைக் கொண்டது. (5 புள்ளிகள்)

2) **சமய மரபு**

- வேத கால மக்களிடம் காணப்பட்ட இயற்கை வழிபாடு பற்றிய சிந்தனைகள்.
- இயற்கை அம்சங்களே நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றமை.
- வேதங்களில் கூறப்பட்ட 33 தெய்வங்களை மண்ணுலகம், இடையுலகம், விண்ணுலகம் என வகைப்படுத்தி வழிபட்டமை.
- யக்ஞம், யாகம், உபாசனை முறைகள், பிரதானமானவை வேட்டல் அக்கினி வழிபாடு முக்கியத்துவம், மந்திரங்களை உச்சரித்தல், அவிப்பொருள்களை வழங்கி யக்ஞம் நிறைவேற்றுதல், புரோகிதர்களின் முக்கியத்துவம்.
- வேள்விக் கிரியைகள் ஓம குண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், துதி பாடுதல், பலியிடுதல், தானம் வழங்குதல் போன்ற கிரியைகள்.
- வேள்வியின் நோக்கம் உலகியல் இன்பங்களேயாகும்.
- பண்டமாற்று வழிபாடு, செல்வம், நீண்ட ஆயள், போர் வெற்றி, நோய் நீக்கம், மக்கட் பேறு, மழை என்பவற்றையும் நாட்டு நன்மைகளையும் அடிப்படையாகக் கொண்டது.
- சதருத்திரிய உபாசனை – பல நாமங் கூறி வழிபடுதல்.
- சாம வேதம் இசையுடன் கூடிய உபாசணை. மாந்திரீக நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியமை.

(5 புள்ளிகள்)

3) **தத்துவ மரபு**

- வேத இலக்கியங்கள் இந்து மெய்யியல் தொடர்பான தத்துவ அடிப்படைச் சிந்தனைகளைக் கொண்டுள்ளது.
- இருக்கு வேத பத்தாம் மண்டலத்தில் அதிகளவு தத்துவ சிந்தனைகள் காணப்படுகிறது.
- கடவுள் பற்றிய சிந்தனைகள் வளர்ச்சி.
- பல தெய்வக் கோட்பாடு பின் சத்தியமான உள்பொருள் ஒன்றே என்னும் ஒரு தெய்வீகக் கோட்பாடு (ஏகம் சத் விப்ரா பகுதா வாந்தி)
- பிரஜாபதி, விஷ்வகர்மன், விஸ்வதேவ என்ற கொள்கை பிற்கால பிரமம் பற்றிய சிந்தனைகளுக்கு மூலம்.
- ரிதக்கோட்பாடு – பிரபஞ்ச ஒழுங்கு – வருணனுடன் தொடர்புபட்ட ஒழுக்கக் கோட்பாடு தத்துவ சிந்தனைகள்.
- நாஸதீய சூக்கத்தில் பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய கருத்துக்கள்.
- யம சூக்தத்தில் கன்ம வினைகள் இறப்புக்கு பிற்பட்ட நிலை, பற்றிய கருத்துக்கள்.
- வருண சூக்கத்தில் முழுமுதல் கடவுள் கோட்பாடு பிரபஞ்சக் கோட்பாடு மற்றும் அறிவியல் சிந்தனைகளையும் இணைப்பதாக அமைந்துள்ளது.
- பிற்கால பல தத்துவ சிந்தனை வளர்ச்சிக்கு இவ் தத்துவ சிந்தனைகளே காரணமாக அமைந்தன.

(5 புள்ளிகள்)

4) **சமுதாய வழமைகள்**

- வேத கால இலக்கியங்கள் அக்காலச் சமுதாயத்தின் பல்வேறு அம்சங்களை கூறுகின்றது.
- அரசியல், குடும்ப வாழ்வு, பொருளாதாரம், உணவு, உடை, அணிகலன்கள், கல்வி, திருமணம், தொழில், பொழுது போக்கு, விளையாட்டுக்கள்.
- பிரமச்சரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம், சந்தியாசம் போன்ற சிந்தனைகள்.
- குடும்பத் தலைவனின் முக்கிய கடமைகளில் ஒன்று வேள்விச் சடங்கை ஒழுங்காக மேற்கொள்ளுதல்.
- சமூகக்கட்டமைப்பு, சமுதாயத் தொடர்புகள் பற்றிய கருத்துக்கள். (புருஷ சூக்தத்தில் அதிகமுள்ளது)

- அதர்வ வேதத்தில் பிணி, பிணி நீக்கும் மருந்து, ஆரோக்கிய வாழ்வு இடம் பெறுவதுடன் உழவுத் தொழில் விருத்தி பசு பெருஞ் செல்வமாக போற்றப்பட்டதுடன் செல்வத்தை மதிப்பிடும் கருவியாகவும் விளங்கியமை.
- வேத கால மக்கள் குழுவாக வாழ்ந்தனர். குழுத்தலைவர் காலப்போக்கில் ராஜன் என்ற நிலைக்கு உயர்வடைதல் அரச ஆட்சியில் சபா, சமிதி நிறுவனங்கள், புரோகிதர்கள் ஒற்றர்கள், கிராமணி, சேனா நீ போன்ற விடயங்கள்.
- பிற்கால வருணக் கட்டமைப்பின் தொடக்க கருத்துக்கள் புருஷ சூக்த பாடலில் இடம்பெற்றமை.
- சமுதய கருத்துக்களை ஆதாரங்களுடன் எதிர்பார்க்கப்படும்.

*(5+5+5+5=20 புள்ளிகள்)*

***02. 1) அரசியல் சமூக சூழ்நிலை***

- தொன்மைமிகு சைவ சமயம் தமிழகத்தில் பல்லவர்காலத்தில் உன்னத வளர்ச்சியடைய அக்கால அரசியல், சமூக சூழ்நிலைகள் சாதகமாக அமைந்தன.
- சமண, பௌத்த சமயங்களின் வருகையாலும் அவற்றின் செயற்பாடுகளினாலும் சைவசமயம் வளர்ச்சி பெறுவதற்கான சூழ்நிலை உருவாகியது. காரைக்காலம்மையார் சைவசமயத்தினதும் அதன் பக்தி இயக்கத்தினதும் முன்னோடியாக விளங்கியவர்.
- கி.பி. 575 தொடக்கம் கி.பி. 850 வரையிலான காலம் தமிழகத்தில் பல்லவராட்சிக் காலமாகும். இக்காலத்தில் தமிழக அரசியலுடன் சைவசமயப் பண்பாட்டு அம்சங்கள் கலப்புற்று சைவநெறி சிறப்படைந்தது. சைவநெறி அரச ஆதரவு பெற்றமை குறிப்பிடற்பாலது. அரசர்கள் சைவ விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். நந்திக்கொடி அரச சின்னமாகவும் சைவசமயச் சின்னமாகவும் சிறப்படைந்தது.
- வடமொழி சார்ந்த மரபுகள் தமிழகத்திற்கு கலந்தன. ஆரம்பத்தில் தொண்டைம ண்டலம் சைவசமய மறுமலர்ச்சிக்கான பிரதேசமாகியது. அதனைத் தொடர்ந்து சோழ மண்டலத்திலும் சைவநெறி பரவலாயிற்று.
- காஞ்சிபுரம் கடிகை நிலையத்தில் வேத, ஆகம, இதிகாச புராண மரபு சார்ந்த விடயங்கள் போதிக்கப்பட்டன. இத்தகைய சமய பண்பாட்டுச் சூழ்நிலை தமிழக மக்களின் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தது. அரசர்கள் சைவசமயிகளாக மாறினர். மன்னர்களின் வழி மக்களும் சைவசமயத்தில் ஈடுபாடுகொண்டனர். பல்லவர்காலச் சமூகம் உலகியல் ஈடுபாடுகளிலிருந்து விடுபட்டு ஆத்மீகவாழ்வில் ஈடுபாடுகொண்டமை குறிப்பிடத்தக்கது. தொண்டர் குலம் தொழுகுலம் என்ற நிலை ஏற்பட்டமை சிறப்பம்சமாகும்.

*(5 புள்ளிகள்)*

**2) நாயன்மார்களின் பங்களிப்பு**

- நாயன்மார்கள் தத்தமது சமயப்பணிகளால் சைவசமய வளர்ச்சிக்கு அரிய பங்களிப்பு நல்கினர். சைவசமயத்தின் பல்வேறு விடயங்களைப் பதிகங்கள் மூலம் வெளிப்படுத்தினர். பல்லவர்கால சைவசமய வளர்ச்சியில் சம்பந்தர், அப்பர், ஆகியோரது பணிகள் குறிப்பிடத்தக்கவை. சைவசமயத்தில் அனைத்து மக்களையும் தம்பால் ஈர்ப்பதற்கு ஏற்றவகையில் தமது பணிகளை மேற்கொண்டனர். அவர்கள் சிவனது பரத்துவம், சைவவாழ்வு போன்ற அம்சங்களைப் போற்றினர்.
- இறைவழிபாட்டில் ஈடுபடும் போது பல்வகை உறவுமுறைகளைக் கடைப்பிடித்தனர். இவர்களது அரியபணிகளால் ஆலயவழிபாடும் ஆலய சேவைகளும் சைவசாதனைகளாகப் பரிணமித்தன. தமது திருப்பதிகங்களைப் பண்ணுடன்பாடிச் சைவ சமயத்திற்குப் பெருமை சேர்த்தனர்.
- சைவநாயன்மார்கள் அற்புதச் செயல்கள் மூலம் இறை உண்மையை நிரூபித்தனர். மக்களுடன் கொண்ட தொடர்பு சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் சாதகமாக அமைந்தது. சைவசித்தாந்த தத்துவப் பொருளைப் பதிகங்கள் மூலம் மிக எளிமையாக வெளிப்படுத்திச் சைவசமயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினர். அப்பர் மகேந்திர

வர்மனின் மதமாற்றத்திற்குக் காரணமாக அமைந்தார். நின்ற சீர்நெடுமாறன் சைவசமயத்தை ஆதரிக்கவும் சைவசமயம் நிலைபெறவும் சம்பந்தர் காரணமாக அமைந்தார். இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தவும் மக்களுக்குச் சமயக் கருத்துக்களைக் கூறவும் ஆலய வழிபாட்டில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் இசையுடன் கூடிய பாடல்கள் பெரிதும் உதவின.

- சமூக சமத்துவம் முக்கியத்துவம் பெற்றது. "ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும்.." என்ற பாடல் இதற்குச் சான்றாகும்.
- சைவசமயத்தில் பக்திநெறி வளம்பெற்றது. சைவநெறியில் ஆலயவழிபாடு, இறைவன் பெருமை, சிவசின்னங்களின் சிறப்பு, நாற்பாதங்களின் மகிமை, குருலிங்க சங்கம வழிபாட்டின் மகத்துவம் போன்ற அம்சங்களினால் சைவசமயம் மேன்மையடைந்தது.

*(5 புள்ளிகள்)*

### 3) அரசர்களின் பங்களிப்பு

- பல்லவ மன்னர்கள் சைவ நெறியைத் தமது அரச நெறியுடன் இணைத்துச் சைவ பக்தி இயக்கத்திற்கு உறுதுணையாக விளங்கினர். சைவ சமய கலாசார மரபை வளர்த்தனர். சைவ ஆலயங்களை அழிக்க முடியாத கருங்கற்களைக் கொண்டு உருவாக்கிச் சைவபக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவினர். தொண்மை மிகு சைவ சமயம் தமிழகத்தில் பல்லவர் காலத்தில் உன்னத வளர்ச்சியடைய, அக்கால அரசர்களது பங்கும் பணியும் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடற்பாலது.
- கி.பி 575 தொடக்கம் கி.பி 850 வரையிலான காலம் தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலமாகும். அரசர்கள் சைவ விருதுகளைப் பெற்றுக் கொண்டனர் நந்திக் கொடி அரச சின்னமாகவும் சைவ சமயச் சின்னமாகவும் சிறப்படைந்தது.
- அரசர்கள் சைவ சமயத்திற்கு மாறினர். மன்னர்களின் வழி மக்களும் சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டனர்.
- வடமொழி மரபுகள் தமிழகத்தில் கலந்தன. இதன் பயனாக ஆகம மரபிலான வழிபாட்டு முறைகள் ஆலயங்களில் இடம்பெற்றன. இரண்டாம் இராஜ சிம்மன் காலம் சைவ சமயத்தைப் பொறுத்த மட்டில் (கி.பி 700 கி.பி 728) ஆகம மரபு பேணப்பட்ட காலம். இம் மன்னன் சிறந்த சிவபக்தன் காஞ்சி கைலாச நாதர் கோயில் உட்பட பல கோயில்களை எழுப்பியவன். இவன் வெளிப்படுத்திய கல்வெட்டுக்கள் மூலம் இவனுக்கு வழங்கப்பட்ட விருதுப் பெயர்கள் இவனது சமய உணர்வை வெளிப்படுத்துவன. ஆகமங்களைப் பிரதானமாக ஏற்று அம்மரபைப் பேணிய வகையில் திருக்கோயில் வளர்ச்சி பெற்று சைவ பக்தி இயக்கம் வளம்பெற உதவியமை குறிப்பிடற்பாலனது. சைவ சித்தாந்த வழியைப் பின்பற்றியவன்.
- சைவ பக்தி இயக்கத்திற்குப் பல்லவ மன்னர்கள் பேருதவியாக இருந்தனர். பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தியமை. அரண்மனைச் சடங்குகள் ஆலயச் சடங்குகளாக மாற்றமடைந்தமை போன்றவையும் குறிப்பிடத்தக்கன.

*(5 புள்ளிகள்)*

### 4) திருத்தலங்களின் வளர்ச்சி

- பல்லவ அரசர்கள் குடைவரை, ரதக்கோயில்கள், கற்றளிகள் என்றவாறு பல்வகை ஆலயங்களை அமைத்தனர். இவ்வாலயங்கள் இறை பக்தி வளம்பெற உதவியதுடன் சைவ சமயம் வளம்பெற அடித்தளமிட்டன. சரியை, கிரியை முதலிய சைவசாதனைகளுக்குரிய நிலையங்களாகத் திருக்கோயில்கள் விளங்கலாயின. ஆகமமுறையிலான வழிபாடுகள் இடம்பெற்றன. திருவுருவழிபாட்டின் நிலைக்களனாகவும் விளங்கின. சிற்பம் ஓவியம், இசை, நடனம் போன்ற நுண்கலைகளின் உறைவிடமாகவம் திருக்கோயில்கள் வளர்ச்சி கண்டன. மூர்த்தி தல தீர்த்த சிறப்புப் பெற்ற திருக்கோயில்களில் பக்தி நெறிபரவச் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது. பல்லவர்காலத்தில் திருக்கோயில் வளர்ச்சியில் மகேந்திரவர்மன் குறிப்பிடத்தக்கவன். மண், மரம் தவிர்த்து புதிய கற்கோவில்களைக் கட்டுவித்தான். இவன் சீயமங்கலம், வல்லம் முதலிய இடங்களில் குடபோக ஆலயங்கள் அமைத்துத் திருக்கோயில் வளர்ச்சி பெற உதவியவன். இவன் சிறந்த கட்டட நிர்மாணச் சிற்பியாக விளங்கியவன்.

- திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயிற் கல்வெட்டு இம்மன்னனது சமயப்பணிகளைக் குறிப்பிடுகிறது. மாமல்லன் இரதக் கோயில்களை அமைத்து திறந்த வெளிப்பாறைகளில் சிற்பக் கூடங்களை அமைத்தான். வராகமண்டபம்,மகிஷாசுர மண்டபம், பாண்டவ இரதங்கள் என்பன இவன் காலத்தனவாகும். மாமல்லபுர ஒற்றைக்கற் கோயில்களில் தர்ம ராஜரதம் அருச்சுனன் ரதம் சிவனுக்குரியவை.
- இரண்டாம் நரசிம்மனாகிய இராஜசிம்மன் காலத்தில் தமிழகத்தில் சைவநெறி சிறப்பாக வளர்ச்சி கண்டது. காஞ்சிபுரத்தில் சைவ திருக்கோயில் அமைத்தவன். இவன் அமைத்த பெரிய கற்றளி காஞ்சி கைலாசநாதர் கோயில் தமிழகத்தின் முதலாவது கட்டுமானக் கோயில் என்ற பெருமை பெற்றது.

  பல்லர்காலத் திருக்கோயில்கள் வளர்ச்சியை நான்கு ட்டங்களாக இனங்காண்பர்.

  1. மகேந்திரன் பாணி
  2. நரசிம்மன் பாணி
  3. இராஜசிம்மன் பாணி
  4. நந்திவர்மன் பாணி

  மண்டகப்பட்டு, மகேந்திர வாடியம், மாமண்டூர், பல்லாவரம், வல்லம் போன்ற இடங்களில் உள்ள குடைவரைக் கோயில் திருக்கோயில் வளர்ச்சியில் முக்கியத்துவமுடையன.

- இதனையடுத்து மண்டபங்கள் முக்கியத்துவம் பெறுவன முதலாம் நரசிம்மன் காலத்தில் மண்டபங்கள் அமைக்கப்பட்டன. அடுத்து கட்டுத்தளிக் கட்டடக்கலை திருக்கோயில் வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்றது. மாமல்லபுரக்கடற்கரைக் கோயில் ஈஸ்வரன் கோயில், காஞ்கி வைகுந்தப் பெருமாள் கோயில் குறிப்பிடற்பாலன. காஞ்சி கைலாசநாதர் கோயில் தென்னிந்தியத் திராவிடக் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களைக் கொண்டு விளங்கி பல்லவர் காலத்திருக்கோயில் வளர்ச்சியின் உன்னத நிலையைக் காட்டி நிற்கிறது. நந்திவர்மன் கால கட்டடக்கலை மரபில் திருக்கோயில்கள் அளவிலே சிறியவை.

(5 புள்ளிகள்)

(5+5+5+5=20 புள்ளிகள்)

***03. 1) சமயப் பணிகள்.***

- இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- ஈசன் உவக்கும் இன்மலர்கள், கோயில் என்பவற்றை வினாவிடை அமைப்பில் இயற்றினார்.
- மகாலட்சுமி தோத்திரம், நடராஜ வடிவம் (ஐந்தொழில்களையும் சுருக்கமாக விளக்கும் நூல்), உமாமகேஸ்வரம் (மாதொரு பாகனாயமைந்துள்ள நுட்பத்தை விளக்குவது).
- கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமரவேள் நவமணிமாலை முதலான சமய நூல்களை ஆக்கியுள்ளார்.
- சமயப் பிரசங்கம் செய்தல், சமயச்சொற்பொழிவுகள் ஆற்றுவதில் ஈடுபட்டவர்.
- இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் பரவலுக்கு முன்னோடியானவர்.
- இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத் தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவி, அதன் ஆதரவில் கல்விச்சாலைகள் பல அமைத்தும், மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தரும பரிபாலனம் செய்தல்.
- சமயம் அனுட்டிப்பதற்குரிய என்பதனை தமது போதனைகளிலும் சாதனைகளிலும் நிலைநாட்டினார்.
- சமய தத்துவக் கருத்துக்களைச் சாதாரண மக்களும் விளங்கக் கூடியவாறு இலகு நடையில் விளக்கினார்.
- கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள் சிந்துகளையும் கையாண்டு சமய நூல்களைப் பாடினார். உதாரணமாக நான்மணிமாலை, தோத்திரம், தேவபாணி என்பனவற்றைக் கூறலாம்.

- சமயத்துறை சார்ந்தனவாகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் அவரது கவிதைகள் காணப்படுகின்றன.
- இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலான சமயப் பெரியார்களை மதித்துப் போற்றியதுடன், அவர்களுடைய போதனைகளையும் பணிகளையும் முன்மாதிரியாகக் கொண்டவர்.

*(5 புள்ளிகள்)*

**2) கலைப் பணிகள்**

- இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் பொருந்திய விபுலானந்தர் கவிதைகள் ஓசை நயம் மிகுந்தவை. "இயலின்றி இசையில்லை : இசையின்றி" என்பது அவரது கொள்கை.
- காலத்திற்கேற்ப கவிதை அமைந்துள்ளது.
- அவரது நூல்களில் செந்தமிழ் நடை கையாளப்பட்டுள்ளது.
- குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுகநாவலர், கங்கையில் விடுத்த ஓலை என்பவற்றை எழுதியுள்ளார்.
- அவர் உள்ளத்தில் அனுபவித்த உணர்வுகளைக் கவிதையிலே தீட்டிக் காட்டும் திறமை உள்ளவர்.
- பல்வேறு ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள், சிந்துகளையும் கையாண்டுள்ளார்.
- நாடகநூல் - மதங்கசூளாமணி, இசைத்தமிழ் - யாழ்நூல்
- ஆங்கிலவாணி, பூஞ்சோலைக்காவலன்
- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் *(1936)* சொல்லாக் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லவர் என்பதால் "முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்" எனப் போற்றப்படல்.
- தமிழ்க் கவிதையின் போக்கிலே புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த பாரதியாரைப் பண்டிதர்கள் தீண்டாதிருந்த வேளையில் பாரித கழகம் அமைத்து, பாரித புகழைத் தமிழ் நாட்டில் பரப்பிய பெருமைக்குரியவர்.

*(5 புள்ளிகள்)*

**3) கல்விப் பணிகள்**

- விபுலானந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெற வேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார்.
- சுய மொழியபிமானமற்றதும், தேசாபிமானமற்றதும், அடிமைத்தனமானதும், நாகரித்தை நாசப்படுத்துவதற்கான கல்வி முறையைக் கண்டித்தார்.
- மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைவாகப் போதிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்தார்.
- "கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது : அது உயிர்ப்பூட்டுவது : உண்மையைக் காட்டுவது : தன்னம்பிக்கையைத் தருவது" எனும் கொள்கை உடையவராக விபுலானந்தர் விளங்கினார்.
- தன் கல்வியிற் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் பல பணிகளை மேற்கொண்டார். இராமகிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை இந்து போர்ட் இராஜரத்தினத்துடன் இணைந்து உருவாக்கினார்.
- *1925* இல் இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று, தன் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.

- இலங்கையின் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை நிறுவி நிருவகித்தார்.
- விபுலானந்தர் இராமகிருஷ்ணமிஷனுடன் இணைந்து பணிபுரிந்த காலத்தில்
  - கல்லடி – சிவானந்தா ஆண்கள் பாடசாலை.
  - ஆனைப்பந்தி - இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை
  - காரைதீவு – சாரதா வித்தியாலயம்.
  - திருகோணமலை - இந்துக் கல்லூரி
  - வண்ணை – வைத்தீஸ்வர வித்தியாலயம்
    ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டினார்.
  - 1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி, அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார்.
  - இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூற் சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச் சபை என்பவற்றின் உறுப்பினராகவிருந்து கல்வித்துறைசார் பணிகளைப் புரிந்தார்.
  - மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு “கலைச்சொல் அகராதியை” உருவாக்கினார்.
  - பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சியான பல பணிகளை ஆற்றினார்.
  - வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல்.
  - பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல்.
  - வார இறுதியில் சைவ சமய வகுப்புக்களையும், பண்ணிசைப் பயிற்சிகளையும் நடாத்துதல்.
  - சமயக்கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல் அவரது புதிய திட்டமாகும். விபுலானந்தரின் அத்தகைய திட்டம் இன்று செயல் முறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
  - இவரது கல்விப்பணிகள் அனைத்திலும் சமயம்சார் கல்விப் பணிகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

*(5 புள்ளிகள்)*

**4) சமூகப் பணிகள்**

- விபுலானந்தர் மக்களை நேசித்தவர். அவர்களுடைய நன்மை தீமைகளில் ஈடுபட்டவர்.
- ஒருமுறை கடவுள் நேரில் வந்தால்….. என்று பேச்சு எழுந்தபோது, சுவாமி பின்வருமாறு கூறினாராம். “நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது.” இவ்வாறு பிறருக்குப் பணி புரிவதே பெருமின்பம் தருவது என்ற திடசித்தம் கொண்டவர்.
- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
- அன்னார் தன் சொந்த நலன்களைத் துறந்த வேளையிலும் நாட்டு நலனையும், மக்கள் நலனையும், மொழி நலனையும் துறவாதிருந்த சிறப்பு போற்றத்தக்கது.
- அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடைத் திட்டங்களை ஏற்படுத்தினார்.
- விபுலானந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஏழை மாணவர்களினதும், அநாதைக் குழந்தைகளதும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்த சமூகப் பணிகளே

*(5 புள்ளிகள்)*

*(5+5+5+5=20 புள்ளிகள்)*

**04. சைவ சித்தாந்தத்தில் ஆணவமலம் பற்றிய கருத்துக்களை விளக்கி ஆராய்க.**

- ஆணவ மலம் உயிரை மயக்கி, அவற்றின் வியாபகத்தன்மை விளங்கவொட்டாது மறைத்து, ஒடுக்கி அணுத்தன்மை படுத்துவதனால் ஆணவம் எனப்பட்டது.
- பசுத்துவம், மலம், அஞ்ஞானம், அவித்தை, பாசம், அசுத்தி, களங்கம், மோகம், தமசு, சடம் எனும் பெயர்களும் ஆணவ மலத்தையே குறிக்கும்.
- ஆன்மாவை சிற்றறிவும் சிறுசெயலும் உடையதாக்குதல் ஆணவத்தின் இயல்பு.
- ஆணவம் ஆன்மாக்களுக்குப் பொய்ப்பிரபஞ்சத்தை மெய்ப்பொருள் என்று அறிவித்து நிற்றலால், அவை வினைகளை இயற்றி பிறவியுள் அகப்பட்டுத்துன்புறுகின்றன.
- நான், எனது என்று எண்ணும் அகந்தையும் இ∴து எனது என எண்ணுகிற மமதையும் ஆணவத்தினாலேயே உண்டாகின்றன.
- ஆணவன் அளவில்லாத சக்திகளை உடையது. ஆணவம் செம்பிற்களிம்பு போல உயிருடன் கலந்து நிற்கும் தன்மையுடையது. உயிர்களுக்கு ஆணவம் ஒரு குற்றமாக இருத்தலால் ‘மலம்’ எனப்பட்டது.
- கண்ணை மறைதது நிற்கும் இருள்போல ஆணவமலம் உயிரின் அறிவை மறைத்து நிற்றலால் ‘இருண்மலம்’ எனப்பட்டது.
- ஆணவம் ஆன்மாவைப் பந்தித்திருக்கும் போது, தன்னையும் காட்டாது பிறபொருளையும் காட்டாது. ஆனால், இருளோ பிறபொருளைக் காட்டாவிடினும் தன்னைக் காட்டும். ஆதலால் ஆணவம் இருளிலும் கொடியது.
- உயிரின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை மறைத்து நிற்கும் ஆணவத்திற்கு குணங்கள் எட்டு என்பர் சைவசித்தாந்திகள். அவை,
  - i) விகற்பம் – தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்.
  - ii) கற்பம் – பிடித்ததைப் பிடித்திருத்தல்.
  - iii) குரோதம் – கோபலம் கொண்டு நினைத்தல்.
  - iv) மோகம் – ஒன்றிற்கு ஆசைப்படல்.
  - v) கொலை – உணிர்களைக் கொல்லுதல்.
  - vi) அஞர் – எப்பொழுதும் துக்கப்படுதல்.
  - vii) மதம் – அகங்காரம் மேலிடுதல்.
  - viii) நகை – சிரித்தல்.
- ஆணவம் உயிரின் குணமன்று ; அதன் குற்றமே.
- நெல்லுக்கு உமி போன்றதாய் உயிரைப் பற்றி நிற்கும் ஆணவத்தை நீக்குதலே முத்திநெறியாகும்.
- ஆன்மாக்களின் மூன்று நிலைகளுள் கேவலநிலை, சகலநிலை என்னும் இரண்டிலும் ஆணவம் ஆன்மாவை பந்தித்து நிற்கும், சுத்திநலை எனும் முத்திப்பேற்றின் போது ஆணவம் வறுத்த வித்துப் போன்று வலி கெட்டு நிற்கும்.
- ஆன்மாக்களின் மாயையின் காரியமான உடம்பை ஒரு சாதனமாகப் பெற்றுள்ளது. இதனைப் பயன்படுத்தித் திருவருளை உணர்ந்து இறைவனைப் பற்றி நிற்பதே ஆணவம் வலி கெடுவதற்கு வழியாகும். இதனை,
  ஒன்று மிகினும் ஒளிகவராதேலுள்ளம்
  என்றும் அகலாது இரு “எனத் திருவருட்பயன் விளக்குகிறது.
- சிவஞானசித்தியாரில் ஆணவமலத்தின் தன்மைகளை அருணந்தி சிவாசாரியார் பின்வருமாறு விளக்கியுள்ளார்.
  ஒன்றதாய் அநேகசக்தியுடையதாய் உடனாய் ஆதி
  அன்றதாய் ஆன்மாவின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று போத்
  திருத்த வத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து
  என்றும் அஞ்ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே.”

(20 புள்ளிகள்)

**05. சோழர் காலக்கட்டடக்கலை வளர்ச்சியில் மன்னர்களின் பங்களிப்பை விளக்குக.**

- சோழர் கால அரசியல் சூழ் நிலையை குறிப்பிடுதல் வேண்டும்.
  1) விஜயாலயன் முதல் பராந்தகன் வரையுள்ள காலம் (கி.பி 850 – 950 வரை)
  2) பராந்தகன் முதல் இராஜராஜன் வரையுள்ள காலம் (கி.பி 950 – 1000 வரை)
  3) இராஜராஜன் முதல் முதலாம் குலோத்துங்கள் வரையுள்ள காலம் (கி.பி 1000 – 1070 வரை)
  4) முதலாம் குலோத்துங்கள் முதல் மூன்றாம் இராஜேந்திரன் வரையுள்ள காலம்.

- முதலாம் கட்டடத்தில் எழுந்த ஆலயங்கள் அளவில் சிறியதாக அமைந்தது. அவை பல்லவர் காலப்பாணியை அடித்தளமாகக் கொண்டவை. விஜயாலய சோழேச்சரம், ஆதித்த ஈஸ்வரம் மூவர் கோயில், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீநிவாஸ் நல்லூரில் உள்ள கோரங்க நாதர் கோயில் குறிப்பிடத்தக்கவை. இவை ஆகம மரபு சார்ந்தவை, வனப்புமிக்க அதிஷ்டானம் அர்த்த மண்டபம், விமானம், தேவகோஷ்டம் ஆகிய அம்சங்கள் முக்கியமானவை.
- இரண்டாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அளவில் பெரிமாகவும், தூண் அமைப்புக்களில் அலங்கார வேலைப்பாடுகள் கொண்டதாகவும் காணப்பட்டது. பாடல் பெற்ற தலங்கள் புனர் நிர்மானம் செய்யப்பட்டது. இக்காலத்தினை செம்பியன் மாதேவிக் காலம் என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டது.
- மூன்றாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அபார வளர்ச்சியினைக் கொண்டிருந்தது. தஞ்சைப் பெருவுடையார் ஆலயம், கங்கை கொண்ட சோழேஸ்வரம் கட்டிடக்கலையின் புதியதொரு பரிமானத்தைக் கொண்டு விமானம், மண்டம், தூபி, தூண்கள், சுற்றுப்பிரகாரம் போன்றன அமைக்கப்பட்டது.
- நான்காம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் பல வேலைப்பாடுகள் கொண்டதாகத் தோற்றம் பெற்றன. தாராசுரம், திரிபுவனம்,ஐராவதேஸ்வரம், கம்பஹரேஸ்வரர், அமிர்த கடேஸ்வரர், சூரியனார் கோயில் போன்றன அமைக்கப்பட்டாலும் சோழர்காலப் பாணியின் முதிர்ச்சியாகவே விளங்கின. விமானம் மண்டபம், சுற்றுப்பிரகாரம், நூறுகால் மண்டபம், ஆயிரம் கால் மண்டபம், திருச்சுற்றுமாளிகை, ஏழுநிலை கோபுரம் முதலியன அமைக்கப்பட்டன.
- திருக்கோயில்களின் சிறப்பம்சங்களை விளக்கிக் கூறுதல் எதிர் பார்க்கப்படும்.

(20 புள்ளிகள்)

**06. இலங்கையிலே பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி நிலையினை பரிசீலனை செய்க**

- தமிழகத்துடன் இலங்கை கொண்ட தொடர்பு காரணமாக பொலன்னறுவையிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்து சமய கலாசார வளர்ச்சி ஏற்படலாயிற்கு.
- இலக்கிய ஆதாரங்கள் கட்டடங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் புதைபொருள் சின்னங்கள் வாயிலாக பொலன்னறுவைக்காலத்து இந்துப் பண்பாட்டு வளர்ச்சியை அறியலாம்.
- பொலன்னறுவைக் காலத்தில் பொலன்னறுவை நகரம் இராஜதானி. இக்காலம் இலங்கையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் உன்னதமான காலம் பொலன்னறுவை, கந்தளாய், மண்டலகிரி, விக்கிரமசலாமேகபுரம், மாதோட்டம், திருக்கோணேஸ்வரம், பதவியா ஆகிய இடங்களில் இந்து சமய கலாசார மரபுகள் வளர்ச்சியடைந்தன.
- இப்பிரதேசங்களில் பல இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன.
- சோழராட்சி பொலன்னறுவை காலத்தில் ஏற்பட்டமை இந்து கலாசார வளர்ச்சிக்கு அனுகூலமாக அமைந்தது.
- பொலன்னறுவையில் திருக்கோயில் பண்பாடு செழிப்புற்றமைக்கு அங்கு கண்டுபிடிக்கப்பட்ட இந்து கோயில்கள் சான்றாகவுள்ளன.
- பௌத்த மன்னர்களும் சைவாலயங்கள் அமைத்து வழிபாடியற்றினர். அரசர்கள் மட்டுமன்றி பிரதானிகளும் வணிகக் கணங்களும் கோயிற் பணிகளில் ஈடுபட்டமை குறிப்பிடற்பாலது.

- இக்காலத்தில் நானா தேசிகர் என்னும் ஐந்நூற்றுவர் என்ற வணிகக் கணம் மிகுந்த சிறப்புப் பெற்று இருந்தமையால் நாட்டின் பல பாகங்களிலும் ஆலயங்கள் அமைத்தனர்.
- கோயிலுக்குத் தேவையான பொருட்களாகிய கற்பூரம், சந்தனம், சீனப்பட்டு, அகில் ஆகியவற்றை இவர்களே இறக்குமதி செய்து விநியோகித்தனர்.
- பொலன்னறுவையில் 14 இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவற்றுட் பொலன்னறுவை வானவன் மாதேவி ஈச்சரம், 5 ஆம் 6 ஆம் சிவாலயங்களும் சோழர் காலத்தவை.
- தமிழகத்திற் சோழர் ஆட்சியில் ஏற்டப்ட இந்துப்பண்பாட்டு வளர்ச்சியினை இவை பிரதிபலிக்கின்றன. தமிழகக் கோயில்களைப் போனறு இங்கு ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திரபாராயணம் என்பவை ஒழுங்கு செய்யப்பட்டன. மெதிரிகிரியா (மண்டலகிரி) கல்வெட்டு, கந்தளாய் பிரமதேயம், ஐயங்கொண்ட சாலமேக சதுர்வேதி மங்களம் பற்றிக் கூறும்.
- கந்தளாயில் அமைந்திருந்த பிராமண குடியிருப்பான ராஜராஜன் சதுர்வேதி மங்கலம். மகா கிரிந்தகமவிலுள்ள ஜயம் கொண்ட சாலமேக சதுர்வேதி மங்கலம் ஆகியன சோழர் ஆட்சியில் சிறப்படைந்தன. வேதாகமக் கிரியைகளை ஆற்றும் பிராமணர்கள் இடம்பெற்றனர். அரண்மனைகளிலும் அக்காலத்திலும் முக்கிய வேத ஆகம வல்லுநர்களான பிராமணர்கள் புரோகிதராகப் போற்றப்பட்டனர்.
- பாடல்பெற்ற தலங்களாகிய திருக்கோணேச்சரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய ஆலயங்களில் 9 புதிய கோயில்கள் அமைத்து புனர் நாமத்துடன் இராஜராஜேஸ்வரம் எனப் பெயரிட்டனர். பாடல்பெற்ற தலமாகிய திருக்கோணேச்சரத்திலும் பல திருப்பணிகள் நடைபெற்றன.
- அரசர்கள் அவர் தம் சுற்றத்தவர்களின் நாளாந்த வாழ்க்கை சடங்குகள் கல்வி கலைகள் ஆகிய பலதுறைகளும் இந்து கலாசாரத்தின் செல்வாக்கைக் காட்டுவன.
- வைதிகச் சடங்களும் இடம்பெற்றன.
- பொலன்னறுவைக் கால இந்துக் கோயில்கள் கட்டடக்கலை, சிற்பக் கலை, விக்கிரக்கலை, கிரியை மரபுகள் என்பவற்றின் வளர்ச்சியைக் காட்டுவன.
- தமிழகத்தில் வளர்ச்சியடைந்த கோயிற் கட்டடக் கலைமரபின் செல்வாக்கு இப்பிரதேசக் கோயில்களிலும் பிரதிபலிக்கின்றன.
- கோயில்கள் தமிழகக் கோயில்களில் காணப்பட்ட சமகால கட்டடக்கலைப் பண்புகள் இங்கும் காணப்பட்டன. பொலன்னறுவைக் கோயில்களில் கல்லிலும் உலோகத்திலும் அமைந்த பல சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- (1907, 1908, 1960) கடவுளர் படிமங்களுள் நடராசர் சோமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி, ஆகிய வடிவங்களுடன் அடியார் படிமங்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்காலம்மையார், வடிவங்களும் உள்ளன. கடவுள் படிமங்களும் அடியார் படிமங்களுள் அங்கு பெருமளவில் கடைத்துள்ளன. ஆலயங்களை அமைத்ததுடன் பூசைகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் அரசர்கள் பல தானங்களை அளித்தனர்.
- மனுநூல் அர்த்த சாஸ்திரம் முதலியவற்றை அரண்மனையிலும் சங்கத்தார் கல்லூரியிலும் போதித்தனர்.
- விக்கிரமபாகு, கஜபாகு ஆகிய அரசர்கள் சைவர்கள் என்று கொள்ளப்படுகின்றன.
- பொலன்னறுவையில் உள்ள 1 ஆம் சிவாலயங்கள் அவர்களது அரண்மனைக் கோயில் என்று கொள்ளப்படுகிறது. வானவன் மாதேவீச்சர கோயிலில் பல்வேறு தரங்களில் உள்ள அந்தணர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். நாயன்மார்கள் படிமங்களை விழாக்காலங்களில் எழுந்தருளப் பண்ணினார்கள்.
- 2 ஆம் கஜபாகு திருக்கோணேச்சரம் சென்று வழிபாட்டு முறைகளைப் புனர்நிர்மாணம் செய்து தசதானம் வழங்கி பங்குனி மாதத்தில் உற்சவம் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்தான் என்று கோணேச்சரம் கல்வெட்டு கூறும்.

(20 புள்ளிகள்)

**07. இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளையும், சாதனைகளையும் விளக்குக.**

- இவர் இந்துமத மறுமலர்ச்சியாளர்களில் தலைசிறந்தவர், வங்காள நாட்டில் அந்தண குலத்தில் பிறந்தவர். சாக்த சமயப் பக்தர்.
- வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்வியலுடன் இணைத்துக் காட்டியவர். மக்களுக்குச் சேவை செய்து மானுட துன்பம் நீக்குவதை நடைமுறை வேதாந்தம் என்பதனைச் சாதனையாகக் கடைப்பிடித்தவர்.
- வேத, உபநிடதச் சிந்தனைகளையும் அவை வெளிப்படுத்தும் இந்து தத்துவத்தையும் ஜனரஞ்சகமான போதனைகளாக எடுத்துக் காட்டிய பெருமை இராமகிருஷ்ண பரமஹம்சரையே சாரும்.
- இந்து தத்துவத்தில் ஈஸ்வர வடிவில் இறைக்கொள்கையை வலியுறுத்தியும் பரப்பிரம்ம என்னும் வேதாந்த நிலையில் பரம்பொருட் கொள்கையை வலியுறுத்தியும் தத்துவார்த்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருகொள்கைகளையும் இணைத்தே இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது கருத்துக்களைப் பரப்பியுள்ளார்.
- அனைத்துச் சமயங்களையும் ஏற்றுக் கொள்ளும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சமயப் பொதுமைமிக்க மனப்பாங்கு மேலான தன்மையுடையது ஆகும். எல்லாச் சமயங்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இறை உண்மையை எடுத்துக் காட்டுகின்றன. என்பதைத் தமது அனுபவங்களால் உணர்த்தினார்.
- சமயங்கள் பலவாறு காணப்பட்டாலும் எல்லாச் சமயங்களும் சமுதாய ஒருமைப் பாட்டையே எடுத்து விளக்குகின்றன என்றும் குறிப்பிட்டார். இதுவே இவரது நடைமுறை வேதாந்தச் சிந்தனையாகும்.
- இராமகிருஷ்ண மடத்தை சுவாமி விவேகானந்தர் தாபித்தபோது இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளே சாதனையாகக் கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார். சமயப்பொறையைப் பேணுதல் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் போற்றுதல் முதலிய கடமைகளிலும் ஈடுபட வேண்டும் என்றும் இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது போதனைகளில் வெளிப்படுத்தினார்.
- இறைவனை உணர்ந்து கொள்வதற்கான எளிய மார்க்கங்களை இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சமய அனுபவத்தினூடாகவே வெளிப்படுத்தினார். இறைவனை அன்பு வழியில் உணரலாம், சமூக வாழ்வின் விருத்தியே சமய வளர்ச்சி முதலிய கருத்துக்களுக்கு முதன்மை வழங்கினார்.
- இத்தகைய கொள்கைகளைச் சாதனையாக்கிக் காட்டவே இந்தியாவிலும், இலங்கையிலும் உலகின் பல பகுதிகளிலும் இராமகிருஷ்ண மடங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.
- வேதாந்தக் கருத்தை உலகளாவிய நிலையில் பரப்பல், ஆங்கில மொழியில் பரப்பல் என்பன இராமகிருஷ்ண மடத்தின் ஊடாக இடம் பெறுகின்றன. இராமகிருஷ்ண விஜயம் எனும் சஞ்சிகையை வெளியிடல், ஏழை எளியவர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தல் முதலான பணிகளையும் இராமகிருஷ்ணமடம் செய்து வருகின்றது.
- சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண மடத்தினூடாகவே இந்து சமயப் பணியில் ஈடுபட்டார்.
- இராமகிருஷ்ண மிஷன் பணிகளையும் தொடர்புபடுத்தி விளக்குதல்.

*(20 புள்ளிகள்)*

**08. அத்வைத கோட்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்கி கூறுக.**

➢ சங்கரவேதாந்த விளக்கமும் பிரமாண நூல்கள் பற்றியும் குறிப்பிட்டு அறிமுகம் செய்தல்.

❖ **பிரம்மம்**

அவரது அத்வைத கோட்பாட்டில் பிரம்மம், ஆன்மா, உலகம் என்பவற்றில் உள்பொருள் ஒன்றே உண்மையானது என்பது குறிப்பிடற்பாலது. பிரம்மம் உண்மை ஏனைய இரண்டும் தோற்றமானது. ஒருமைக் கொள்கையே அத்வைதம் போதிக்கும் பிரம்மக் கோட்பாடு ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றே கேவல அத்வைதம் பிரம்ம பரிபூரண வாதம், ஒருமை வாதம், ஏகான்ம வாதம் போன்ற பல பெயர்கள் இதற்குரிய விளக்கங்களாக உள்ளன.

பிரம்ம மட்டுமே உண்மை, அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது, எங்கும் செறிந்த நீக்கமற்ற நிறைந்திருப்பது. பிரம்ம எதனைப் போன்றதாகவும் இல்லையெனக் கூறலாமேயொழிய எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம். (நேதி)
பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன.

1. நிர்க்குண நிலை
2. சகுண நிலை – விளக்கம்

ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரம்ம பல சீவன்களாகின்றது. ஆன்மாவே பிரம்ம, தத்துவமஸி, அகம் பிரமாஸ்மி, சோகம் அஸ்மி எனும் உபநிடத மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படையாகின்றன.

சங்கரர் அத்வைத் தத்துவத்தை அரைச் சுலோகம் ஒன்றில் தெளிவுபட விளக்கி பிரம்மமே சத்தியென கூறுகின்றார். "பிரம்மம் சத்தியம், ஜகத்மித்யா, ஜீவோ பிரம்ம ஏவ ந அபர" பிரம்மம் உண்மையான பொருள், இந்த உலகம் ஒரு தோற்றம், ஒவ்வோர் ஆன்மாவும் பிரம்மம் தான் வேறொன்றுமில்லை என்பது இதன் பொருள்.

❖ **ஆன்மா**

- சங்கரர் ஆன்மாவின் இரு நிலைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.
- பரமாத்மா (என்றும் உள்ள பொருள்)
- ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)
- ஜீவாத்மாக்கள் பலவாகத் தோன்றும் அடிப்படையில் ஜீவாத்மாகவும் பரமாத்மாகவும் ஒன்றென்பதைப் பின்வரும் வாதங்கள் மூலம் நிறுவுகின்றார்.
  1. அவச்சேத வாதம்
  2. பிரதி பிம்ப வாதம்
- அவித்தை என்பதன் பொருள் அறியாமையாகும். அவித்தையே பிரமத்தைச் சீவன்னாக்குவது.
- அவித்தையாகிய அஞ்ஞானத்திலேயே சீவன் தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.

❖ **உலகம் பற்றிய கொள்கைகள்**

சங்கரின் அத்வைதக் கொள்கையின் படி உலகம் என்பது உண்மையல்ல, அது தோற்றம் என்பதாகும். உலகத்தின் உண்மையற்ற நிலை என கூறுவதற்குரிய தேவையும் காரணங்களும் பற்றிய விளக்கம். உலகம் நிலையற்றது, பொய்யானது. விவர்த்தவாதக் கோட்பாடு – கயிறு பாம்பாக மாறித் தெரியும் காட்சி மாயைக் கோட்பாட்டின் மூலம் பிரம்மமே உலகைத் தோற்றுவிக்கின்றது என்றார். மாயை என்பதற்கு பலவிதமான பொருள் கொள்வர். மாயையைச் சொல்லால் விளக்க முடியாது, அது அநிர்வசனீயம் எனப்படும்.

❖ **ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகள்.**

சங்கரர் ஞானத்திற்கு முதன்மை அளிக்கின்றார், ஆன்மா அவித்தையாகிய அறியாமையிலிருந்து விடுபட்டு தன்னை பிரம்மென உணர்தலே விடுதலையாகும். தன்மை பிரம்மமாக உணர்வதற்குரிய வழிமுறைகளாக பிரம்ம ஞானத்தைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகியன முக்கியமானவை. ஞானத்தைப் பெறுவதற்கு வழிபாடு, நல்லொழுக்கம், நியமநிட்டை என்பனவும் அவசியம். தம்மை பிரம்மமென உணர்தலே அத்வைத அனுபவம் அவர் கூறும் முத்தி அத்வைத முத்தி, சங்கரர் சீவன், விதேக முத்திப ற்றியும் குறிப்பிடுகின்றார். பாவும் பிரம்மத்தின் அம்சங்களே என்பதை உணர்கின்ற நிலையில் வேற்றுமைகள் நீங்கும்.

(20 புள்ளிகள்)